செய்திக் குறிப்பு   dt: 11.01.2018

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் திரு. R. கேசவன். இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் வருகின்ற ஜனவரி-28 மற்றும் மார்ச்-11 -என இரு தினங்கள் நடைபெறும் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து அளிப்பது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. தேசிய போலியோ தடுப்பு தினம் சுகாதாரத் துறையால் நடத்தப்பட உள்ளது. மகளிர் மேம்பாட்டுத்துறையின் சார்பாக அங்கன்வாடி ஊழியர்கள் இதில் பயன்படுத்தப்பட உள்ளனர். வழக்கமான Camp- இல்லாமல் பேருந்து நிலையம், இரயில் நிலையம். மற்றும் திருநள்ளாறு கோயில்களிலும் போலியோ சொட்டு மருந்து அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 5-வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் அனைவரும் இதில் பயன்பெறுவார்கள். காரைக்கால் துறைமுக வளாகம் மற்றும் முக்கிய இடங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காரைக்காலில் சுமார் 14,252/: 5-வயதிற்குட்பட்ட குழந்தைகள் இதில் பயன் பெறுவார்கள். உடன் சுகாதாரத் துறை அதிகாரிகள் மற்றும் கல்வித்துறை மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

11/1/18

Asst. P.R.O. to
COLLECTOR